Job Access
Driving disability employment

# தகவல் ஏடு
# நீங்கள் வேலை தேடிக் கொண்டிருக்கும் உடலியலாமை உள்ள ஒரு இள வயது நபரா?

உங்களுடைய பாடசாலைப் படிப்பு, பயிற்சி அல்லது மேல் படிப்பு முடிந்ததும் நீங்கள் வேலைக்குச் செல்ல உதவக்கூடிய இலவச சேவைகள் உள்ளன. இவற்றில் உள்ளடங்குவன;

**‘உடலியலாமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவைகள்’ (Disability Employment Services (DES))**
உடலியலாமை, காயம் அல்லது உடல்நல நிலை உள்ள தகுதி பெறும் இள வயது நபர்கள் வேலை தேடவும், அவர்கள் வேலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் ‘உடலியலாம உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவைகள்’ எனும் இத் திட்டத்தினால் உதவ இயலும்.

**‘சமூக அபிவிருத்தித் திட்டம்’ (Community Development Programme)**
தொலைதூர அவுஸ்திரேலியப் பகுதிகளில் நீங்கள் வசித்துக்கொண்டு வேலை தேடிக்கொண்டிருந்தால் ‘சமூக அபிவிருத்தித் திட்டம்’ (CDP) எனும் இத் திட்டத்தினால் உங்களுக்கு உதவ இயலும்.

**வேலைக்கு மாறல் (Transition to work (TTW))**
நீங்கள் 15 மற்றும் 25 வயதிற்கு உட்பட்டவர் என்றால் TTW எனும் திட்டத்தின் மூலம் உங்களால் உதவி பெற இயலக்கூடும். பணியிட நடைமுறைகளைப் பற்றிய பயிற்சி மற்றும் பணியிட எதிர்பார்ப்புகள் மற்றும் வேலை மற்றும் படிப்பிற்குத் தேவைப்படும் திறன் அபிவிருத்தி ஆகியவற்றின் மூலமாக நீங்கள் வேலைக்கு ஆயத்தமாக TTW –வினால் உங்களுக்கு உதவ இயலும்.

**‘தொழிற்கல்வி, பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு மையங்கள் (Vocational, Training & Employment Centres (VTECs))**
நீங்கள் பூர்வீகப் பழங்குடியைச் சேர்ந்த வேலை தேடிக்கொண்டிருக்கும் ஒரு இள வயது நபர் என்றால் VTEC மையங்களினால் உங்களுக்கு உதவ இயலும்.

**தொழிற்பயிற்சிகள் மற்றும் பயிற்சிகள் (Apprenticeships and Traineeships)**
வேலைக்கான கல்வித்தகுதி ஒன்றைப் பெற்று வேலை ஒன்றைப் பெறுவதற்கான ஒரு வழியாக தொழிற்பயிற்சி அல்லது பயிற்சி ஒன்றில் நீங்கள் ஆர்வம் கொள்ளலாம்.

இச் சேவைகளில் எதையும் பற்றிய மேலதிகத் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால் ‘ஜாப்அக்ஸெஸ்’ அமைப்பினரது www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது ‘ஜாப்அக்ஸெஸ்’ அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள்- கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.